கோவை காந்திபுரத்தில் ரூபாய் 300 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பெரியார் நூலக கட்டுமானப் பணிகளை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டார். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகவளாகத்தில் இளையோர் நலன் மற்றும் அதிகாரப்படுத்துதல் மையத்தின் சார்பில் துணைவேந்தர் முனைவர் க.ரவி தலைமையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு 2000மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், சிவ.வீ.மெய்யநாதன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், எம்.பி.க்கள் கார்த்தி ப.சிதம்பரம், நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சியர் திருமதி கா பொற்கொடி, சிவகங்கை மறை, மாவட்ட ஆயர் லூர்து ஆனந்த் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட தலைவர்கள் சிலைகளை முதல்வர் திறந்து வைக்கிறார்!

பொள்ளாச்சியில் நடைபெறும் விழாவில் விவசாயப் பெருங்குடி மக்கள் திரளாகப் பங்கேற்பீர்!

பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அழைப்பு!

சென்னை, ஜூலை 20-

முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 23ஆம் தேதி பொள்ளாச்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நிறுவப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே.பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரது திருஉருவச் சிலை மற்றும் அரங்கத்தினை திறந்து வைக்க உள்ளார்கள். நிகழ்ச்சியில் விவசாயப் பெருங்குடி மக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் பொதுப்பணித்துறை நீர் வள தலைமை பொறியாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டு வரும் பெருந் தலைவர் கு.காமராஜர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், வி.கே.பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரது திரு உருவச்சிலை / மற்றும் அரங்கம் அமைக்கும் இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று (19.07.2025) பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் தமிழ்நாடு அரசின் முதன்மை செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், தலைமை பொறியாளர் ரங்கநாதன், பொள்ளாச்சி நகர் மன்ற தலைவர் திருமதி.ஷியாமளா நவநீதகிருஷ்ணன், செயற்பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பொதுப் பணித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முழுவதும் ஆற்றல் மிகுந்த தலைவர்களை போற்றும் வகையில் அவர்களுக்காக அரங்கம் கட்டுவது சிலை அமைப்பது போன்ற பணிகள் தமிழ் நாடு அரசின் சார்பில் நடைபெற்று வருகிறது.

அதன் அடிப்படையில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் நடைபெற காரணமாக திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், இப்பகுதி விவசாயிகளின் தந்தை என அழைக்கப்படும் வி.கே.பழனிசாமி கவுண்டர், மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோருக்கு திருவுருவச் சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் ரூபாய் 4 கோடி 25 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்ற இப்பணிகள் ஆனது இப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் சக்தியாக திகழ்ந்த இந்த நான்கு பெருந்தலைவர்களை நினைவுகூரும் வகையில், சிலை அமைப்பதுடன், விவசாய மக்கள் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக 1348 சதுர அடியில் அரங்கம் அமைக்கும் பணியும் இந்த அளவில் முழுமை அடைந்துள்ளது.

முழுமையடைந்த இப்பணிகளை, வருகின்ற 23ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்பகுதிக்கு வருகை தந்து இப்பெரியவர்களின் திருவுருவச் சிலையினையும் அரங்கத்தினையும் திறந்து வைக்க உள்ளார்கள். நிகழ்ச்சி முழுக்க முழுக்க விவசாய மக்கள் சார்ந்த விவசாயிகளுக்கான நிகழ்ச்சியாக இருப்பதால் இப்பகுதியின் விவசாய மக்கள் இந்நிகழ்ச்சியில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அரசின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

எஸ், முரளி – பா, பொன்னுசாமி – கீதா முரளி எம்.சி, முன்னிலை! தென்றல் வி,விஜய் தலைமை! மயிலை கிழக்குப் பகுதி

171 அ வட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் பிறந்தநாள்! கழக அரசின் 5ஆம் ஆண்டு தொடக்க விழா!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை.20-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 171 அ வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு இன்று (20.7.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு ராஜாகிராமணி தோட்டம், ஆர்.ஏ.புரம் சென்னை 28-ல் மாவட்ட பிரதிநிதி தென்றல் வி. விஜய் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இதில் பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி, கீதா முரளி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் எல்.தட்சணாமூர்த்தி, காசி (எ) வீரமணி, பிள்ளர் என்.செல்வம், யூ.சுரேஷ், ப.கார்த்திக், பி.சந்தோஷ், எம்.விக்கி, ஆர்.விஜய், ஜி.கே.நரசிம்மன், இ.உதயா, தினேஷ், ஞானபிரகாசம், ப.வைதி, எஸ்.கௌதம், எம்.மணி, எம்.மணிகண்டன், பி.ஆகாஷ், வி.நந்தா, இளங்கோ, மூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

விழாவில் மகளிர்க்கு புடவை, மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம், அயன் பாக்ஸ், மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் ஆகியவை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

இதில் கோமதி மகோகரன், ரேவதிபொன்னுசாமி, இ.என்.சுந்தரம், டி.சந்திரசேகரன், கே.பி.ரமேஷ், எ.சிவகாமி, வி.மூர்த்தி, என்.ரவி, ஆர்.சீனிவாசன், என்.குணசேகரன், முனுசாமி, தியாகராஜன், ப.மதிவாணன், டி.கே.பாபு, இரா.ம.சுதாகரன், எஸ்.குரு, ரா.சுரேந்தர், பா.மதன், டி.எஸ்.விஷ்ணு சங்கர், எம்.தீபா, கே.பி.தங்கம், ஜி.ஐயப்பன், எஸ்.நந்தகுமார், கே.ராயர், கே.பசுபதி, தாமரைச்செல்வன், சௌந்தரபாண்டி, முருகேசன், கே.பாலு, பி.சரவணன், ஏ.விமல்நாதன், ஏ.அக்பர்அலி, எஸ்.அன்பு, எஸ்.விண்ணரசு, மணிகண்டன், ஆர்.ஞானபிரபு, பி.நடராஜன், ஆர்.ரவி, ஆர்.கமலம், எம்.அண்ணபூரணி, எம்.பாஸ்கர், எம்.எஸ்.டி.மணிமாறன், ஜி.கே.விஜயகுமார், எம்.மைதிலி விஜய், பெதேல், பி.ராமகிருஷ்ணன், ரவிச்சந்திரன், ஆதர்ஷ் எல்.ரவி, ஜெ.அசோக்குமார், வி.கலைச்செல்வி, ஆர்.சிவன், கே.காசிபாண்டியன், ஆர்.எஸ்.மனோகர், வி.குமார், எஸ்.குமார் கே.முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் ஆவடி அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் (வார் ரூம்) திறப்பு விழா மாவட்ட கழக இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் வரவேற்பில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புதிய வார் ரூமை தொடங்கி வைத்தார். உமடன ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. , தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், நிர்வாகிகள் சி.ஜெரல்டு, பி.டி.சி.செல்வராஜ், நிவேதா, ம.ராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், சன்.பிரகாஷ், மேயர் ஜி.உதயகுமார், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை. ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ.டி.பிரியாகுமார், ஜி.துர்கா பிரசாத், சதிஷ்குமார், பெ.வினோத், வி.தியாகராஜன், எம்.மோகன், ஆர்.பிரவீன் குமார் உள்பட பலர் உள்ளனர். முன்னதாக நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க. முத்து அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பயிற்சி வகுப்பு துவங்குவதற்கு முன்பாக அன்னாரின் மறைவிற்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 150 வது நாள்!

கொளத்தூர் பகுதியில் அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 20 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி 5வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், 100வது நாள் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, 125 வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் கலந்து கொண்டு காலை உணவு வழங்கினர் .

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 150 வது நாளான நேற்று (19-07-2025), கொளத்தூர் மேற்கு பகுதி, 64 அ வார்டு, கொளத்தூர், அ வார்டில் உள்ள மேயர் சிட்டிபாபு பூங்கா அருகிலும் மற்றும் 64 வது வார்டு, பெருமாள் கோவில் தெருவில் உள்ள மக்காரம் தோட்டம் அருகிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தினந்தோறும் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

"அன்னம் தரும் அமுதக் கரங்கள்" மாபெரும் திட்டமானது நேற்றுடன் (19.7.2025) தற்பொழுது 150 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் எம்.நாகராசன், ஐசிஎப்.வ.முரளிதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சந்துரு, மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.அமுதா பொன்னிவளவன், திருமதி.யோகபிரியா தனசேகர், திருமதி.தாவத் பீ, திருமதி.ஸ்ரீதணி, வட்டச்செயலாளர்கள் எம்டி. தமிழ்செல்வன், எஸ்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும்

இலங்கைத் தமிழர்களின் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம்!

பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 20-

பத்திரப் பதிவு துறைத் தலைவர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :

இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கை தமிழர்களின் திருமணங்களை பதிவு செய்வதற்காக கடந்த 2018 ஆம் ஆண்டு ஒரு சிறப்பு முகாம் பத்திரப்பதிவுத்துறையால் நடத்தப்பட்டது. 10.12.2018 முதல் திருமண பதிவுகள் இணையவழி வாயிலாக சம்பந்தப்பட்ட திருமண தரப்பினரால் விண்ணப்பித்து திருமண பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் திருமணங்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் அமைத்து தருமாறு தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பத்திரப்பதிவுத்துறைக்கு கோரிக்கை கடிதம் அனுப்பி உள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு மறுவாழ்வு முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களின் திருமணங்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் நடத்திட பத்திரப்பதிவுத் துறை உரிய ஏற்பாடுகள் செய்துள்ளது. சனிக்கிழமை வேலை நாட்களாக உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் 26.07.2025 சனிக்கிழமை அன்றும் சனிக்கிழமை வேலை நாட்களாக இல்லாத இதர சார்பதிவாளர் அலுவலகங்களில் 25.07.2025 வெள்ளிக்கிழமை அன்றும் மேற்கண்ட திருமணங்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு பதிவுத்துறை தலைவரால் தொடர்புடைய பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை திருமண பதிவிற்காக காத்திருக்கும் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்1, வார்டு 1 அனகாபுத்தூர் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடத்தினைப் பயன்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர் வே.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.